வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: ரோஷ்ணாகாசிம்

நாள்: 24.11.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

தேசிய மாணவர் படையில் இளைஞர்கள் அதிக அளவில் இணைந்து சேவையாற்ற வேண்டியதன் அவசியத்தை 116 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் வருகிற நாளை தொடங்கி அடுத்த மாதம் 20 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று இத்தாலி செல்கிறார்.

புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் 98-ம் ஆண்டு சித்தி தினம் இன்று கடைபிக்கப்பட்டது

*மன் கீ பாத்* 1 (17)

தேசிய மாணவர் படையில் இளைஞர்கள் அதிக அளவில் இணைந்து சேவையாற்ற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி

வலியுறுத்தி உள்ளார். அகில இந்திய வானொலியின் மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில் 116 ஆவது முறையாக இன்று நாட்டு மக்களிடையே உரையாற்றிய அவர், இளைஞர்களிடையே ஒழுக்கம், தலைமை பண்பு மற்றும் சேவை உணர்வை தேசிய மாணவர் படை உருவாக்குவதாக கூறினார். தேசிய மாணவர் படை தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, தமது மாணவர் படை அனுபவங்களை நினைவு கூர்ந்த பிரதமர், நடப்பாண்டில் 20 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளதாக தெரிவித்தார். நாடு முழுவதும் 5 ஆயிரம் புதிய பள்ளி மற்றும் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையை தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறிய பிரதமர், என்சிசி யில் 40 சதவிகிதம் பெண்கள் சேவையாற்றுவதாக தெரிவித்தார். அன்னையின் பெயரால் மரம் நடுவோம் பிரச்சாரத்தின் மூலம் கடந்த 5 மாதங்களில் 100 கோடி மரங்கள் நடப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டிய பிரதமர், இந்த இயக்கத்தின் கீழ், மரக் கன்றுகளை நட்டு, செல்பி எடுத்து மை கவ் இணையதளத்தில் பதிவிடுமாறு பொதுமக்களை கேட்டுக்



கொண்டுள்ளார். இந்த பிரச்சாரம் தற்போது உலக நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார். அரசு

அலுவலகங்களில் குப்பைகளை அகற்றும் சுவச்சுதா அபியான் திட்டம் தொடங்கப் பட்டுள்ளதை சுட்டிக் காட்டிய பிரதமர் கழிவுகளில் இருந்து செல்வம் என்ற கருத்தின் அடிப்படையில் இளைஞர்கள் குப்பைகளை நிர்வகிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் வரும் ஜனவரி 12 ஆம் தேதி இளையோர் தினமாக கொண்டாடப்படுவதை அடுத்து, அன்றைய தினம் புதுடெல்லியில் விக்சித் பாரத் இளம் தலைவர்கள் உரையாடும் நிகழ்ச்சி நடைபெற உள்ளதாக பிரதமர் அறிவித்தார். புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் இருந்து 2 ஆயிரம் இளைஞர்கள் பங்கேற்க உள்ளதாக பிரதமர் கூறினார். அரசியல் பின்னனி இல்லாத குடும்பங்களை சேர்ந்த இளைஞர்களை அரசியலில் இணைக்கும் வகையில் நடைபெறும் இத்தகைய முயற்சிகள் பெரும் பயனளிக்கும் என்றார். இணைய மோசடிகளில் இருந்து மூத்த குடிமக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளதாக எடுத்துரைத்த பிரதமர், சட்டத்தில் டிஜிட்டல் கைதி-ற்கான முகாந்திரம் எதுவும் இல்லை என்று தெளிவுப்படுத்தினார். வாசிப்பு பழக்கத்தின்

முக்கியத்துவம் குறித்து பேசிய பிரதமர், புத்தகங்கள் மனிதர்களின் சிறந்த நண்பன் என்றும், நூலகங்களின் வாயிலாக இந்த நட்பை வலுப்படுத்த முடியும் என்றும் கூறினார். சென்னையில் பிரகரித் அறிவகம் என்ற பெயரிலான நூலகம் அமைக்கப்பட்டுள்ளதற்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார். புலம் பெயர்ந்த இந்தியர்கள் வெளிநாடுகளில் தங்களது முத்திரையை பதித்த கதைகளை நமோ செயலி அல்லது மை கவ் இணையதளத்தில் பகிர்ந்து கொள்ளுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார். நாட்டின் பண்டைய கடல் சார் திறன் தொடர்பான ஆதாரங்களை பாதுகாப்பதற்கான பிரச்சாரமும் தற்போது நடைபெற்று வருவதாக குறிப்பிட்ட அவர், இதற்கென குஜராத் மாநிலம் லோத்தலில் மிகப் பெரிய அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருவதாக கூறினார். இந்திய கலாச்சாரத்தை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் சுலோவேக்கியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை பாராட்டி இத்தகு முயற்சிகள் நாட்டின் கலாச்சாரம் உலக அளவில் கொண்டு செல்லப்பட்டுள்ளதை எடுத்துரைப்பதாக கூறினார். உயிரி பன்முக தன்மையை பராமரிப்பதில் சிட்டுக் குருவிகள் முக்கிய பங்கு வகிப்பதாக கூறிய பிரதமர் நகரமயமாக்கல் காரணமாக தற்போது நகரங்களில் இவை குறைந்த

எண்ணிக்கையில் காணப்படுவதாகவும், அவற்றை மீட்டெடுக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார். சென்னையில் செயல்பட்டு வரும் கூடுகள் அறக்கட்டளை கடந்த 4 ஆண்டுகளாக பள்ளி குழந்தைகளுக்கு சிட்டுக்குருவிகளுக்கான கூட்டை அமைப்பது தொடர்பான பயிற்சி அளித்து வருவதற்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார். இதன் மூலம் சுற்றுவட்டாரங்களில் சிட்டு குருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக கூறினார். குழந்தைகள் இடையே இயற்கை மீதான பொறுப்புணர்வை ஏற்படுத்த இயற்கை கல்வியின் தொகுப்பை மைசூரில் உள்ள ஒரு அமைப்பு உருவாக்கி உள்ளதான தெரிவித்த பிரதமர், மக்களிடமிருந்து இது போன்ற கருத்துக்கள், கடிதங்கள் மற்றும் ஆலோசனைகள் தமக்கு ஊக்கம் அளிப்பதாகவும், மனதின் குரல் நிகழ்ச்சியை செம்மைப்படுத்துவதற்கு அவை உத்வேகம் அளிப்பதாகவும் கூறினார்.

குளிர்கால கூட்டத் தொடர் (9)

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் வருகிற நாளை தொடங்கி அடுத்த மாதம் 20 ஆம் தேதி வரை நடைபெற உள்ள நிலையில், கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்ள நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு

தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில், மத்திய அமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல், காங்கிரஸ் சார்பில் திரு ஜெயராம் ரமேஷ், பிரமோத் திவாரி, திமுக சார்பில் திரு டி ஆர் பாலு, திரு திருச்சி சிவா, மதிமுக திரு வைகோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

ஜெய்சங்கர் (6)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று இத்தாலி செல்கிறார். பிஜியில் ஜி-7 நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றும் அவர், இந்நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார். மேலும், ரோமில் இந்திய தூதரகத்தின் புதிய வளாகத்தையும் அமைச்சர் திறந்து வைக்க உள்ளார்.

ஒடிசா பர்பா (8)

ஒடிசா பர்பா 2024 என்ற ஒடிசாவை நோக்குங்கள் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை பங்கேற்கிறார். ஒடிசா பர்பா என்பது புது தில்லியில் உள்ள ஒடியா சமாஜ் என்ற அறக்கட்டளையால்

நடத்தப்படும் ஒரு நிகழ்வு ஆகும். இந்த ஆண்டு ஒடிசா பர்பா நவம்பர் 22 முதல் 24 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒடிசாவின் வளமான பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் இந்நிகழ்ச்சியில், பல்வேறு களங்களில் உள்ள முக்கிய வல்லுநர்கள் மற்றும் புகழ்பெற்ற வல்லுநர்கள் தலைமையில் ஒரு தேசிய கருத்தரங்கு நடத்தப்பட உள்ளது.

*அன்னபூர்ணா*(16)

மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி நாளை புதுடெல்லி ஆகாஷவாணி அலுவலகத்தில் உள்ள ரங்க் பவனில் பாலின அடிப்படையிலான வன்முறைகளை ஒழித்தல் தொடர்பான தேசிய இயக்கத்தை தொடக்கி வைக்க உள்ளார். மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவுகான், ஊரக வளர்ச்சி-தொலைதொடர்புத் துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். பாலின அடிப்படையிலான வன்முறைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க பொதுமக்கள், அரசு சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் இந்த இயக்கம் ஐநா ஆதரவுடன் நடத்தப்படுகிறது. உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும்

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினமான நவம்பர் 25 முதல் மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 வரை பாலின அடிப்படையிலான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு 16 நாட்கள் இந்த செயல்பாட்டு இயக்கம் கடைபிடிக்கப்படுகிறது.

*கூட்டுறவு மாநாடு* (9)

புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் ஐசிஏ உலகளாவிய கூட்டுறவு மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை தொடக்கி வைக்கிறார். சர்வதேச கூட்டுறவு கூட்டணியின் 130 ஆண்டுகால வரலாற்றில் முதன் முறையாக உலகளாவிய கூட்டுறவு மாநாடு மற்றும் பொதுசபை இந்தியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில், சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 குறித்த நினைவு சின்னத்தை பிரதமர் வெளியிடுகிறார். இம்மாநாட்டில் பூடான் பிரதமர் திரு டாஷோ ஷெரின் டோக்கே, மற்றும் பிஜி பிரதமர் திரு மனோவா கமிகாமிகா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

*அரவிந்தர்* (7)

புதுவை மரைன் வீதியில் உள்ள அரவிந்தர் ஆசிரமத்தில் 98-ம் ஆண்டு சித்தி தினம் இன்று கடைபிக்கப்பட்டது. காலை 6 மணிக்கு ஆசிரம உறுப்பினர்களின் கூட்டு தியானம் நடந்தது. பின் அரவிந்தர் வாழ்ந்த அறை மட்டும் பக்தர்கள் தரிசனத்துக்காக மதியம் 12 மணி வரை திறந்து வைக்கப் பட்டு பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். உள்ளூர், வெளியூர் பக்தர்கள் மட்டுமல்லாது வெளிநாட்டு பக்தர்களும் நீண்ட வரிசையில் நின்று அரவிந்தரின் அறையை பார்வையிட்டு, தரிசனம் செய்தனர்.

*திரைப்படவிழா*(12)

55 ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் நாளைய படைப்பாளி மனங்கள் என்ற நிறைவு நிகழ்ச்சி நவம்பர் 21 முதல் 23 ம் தேதி வரை நடைபெற்றது. இந்தியாவின் மிகவும் நம்பிக்கைக்கு உரிய இளம் திரைப்பட இயக்குநர்களை கண்டறிந்து, அவர்களுக்கு ஆதரவு வழங்கும் முன்னணி தளமாக இந்த நிகழ்ச்சி உருவெடுத்துள்ளது. இதன் சிறப்பம்சமாக, 48 மணி நேர திரைப்பட தயாரிப்பு போட்டி நடைபெற்றது. இதில் பங்கேற்பாளர்கள் தலா 20 பேர் கொண்ட குழுக்களாக பிரிக்கப்பட்டு, தொழில்நுட்ப யுகத்தில் உறவுகள் என்ற கருப்பொருளை மையமாக கொண்ட குறும்படங்களை உருவாக்கினர். பங்கேற்பாளர்களை

பாராட்டிய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளர் திரு சஞ்சய் ஜாஜூ மிகுந்த அழுத்தத்தின் கீழ், 48 மணி நேரத்திற்குள் இது போன்ற முன் மாதிரியான படங்களை தயாரிப்பது ஒரு சாதனை என்றார்.

வானிலை (12)

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி நாளை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, புயலாக உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, அடுத்த இரு தினங்களுக்கு தமிழகத்தின் கடலோர பகுதிகளிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் கனமழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கிழக்கு இந்திய பெருங்கடல் மற்றும் தென்கிழக்கு வங்கக் கடல் முதல், குமரிக் கடல் வரை வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் வரும் 29 ஆம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளது. இதனிடையே புதுவை பகுதி மீனவர்கள் ஆழ்கடல் பகுதிகளில் மீன் பிடிக்க செல்வதை தவிர்க்க வேண்டும் என மீனவர் நலத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தேசிய மாணவர் படையில் இளைஞர்கள் அதிக அளவில் இணைந்து சேவையாற்ற வேண்டியதன் அவசியத்தை 116 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் வருகிற நாளை தொடங்கி அடுத்த மாதம் 20 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று இத்தாலி செல்கிறார்.

புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் 98-ம் ஆண்டு சித்தி தினம் இன்று கடைபிக்கப்பட்டது